RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s146

# உமா மகேஸ்வரியின் 'மரப்பாச்சி' உணர்த்தும் பெண் உளவியல்

**த. காந்திமதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மதுரைக் கல்லூரி (தன்னாட்சி), மதுரை-625011, தமிழ்நாடு, இந்தியா.

# Uma Maheshwari's 'Marappachi' Evokes Female Psychology

**D. Gandhimathi** [a, *]

[a] Department of Tamil, The Madura College (Autonomous), Madurai-625011, Tamil Nadu, India

* Corresponding Author: gandhimathi@maduracollege.edu.in

Received: 26-12-2021
Revised: 20-08-2022
Accepted: 03-09-2022
Published: 28-11-2022

Check for updates

**ABSTRACT**

In ancient times, there has never been a situation such as domination by a man over a woman or vice versa, rather they worked together, and ate together. Women's puberty and family life were significantly highlighted. During the ages of ethnic groups, women played a lead role. Once the land-based society has evolved, the patriarchy, rights in the property, motherhood, childcare, growing a child, household chores, housekeeping, and domestic duties came into the picture and were assigned to women. Feminism has roots over thousands of years but later on, it was surrendered to patriarchy. Women have to fight for their rights and with that, the years passed on. It has a huge impact on her mental strength, and she was resisted for her every work and every word. Hence, the literature "Marappachi" was taken to research women's psychology.

**Keywords:** Feminism, Marappachi, Uma Maheshwari, Women Psychology

## முன்னுரை

வெவ்வேறு இதழ்களில் வெவ்வேறு காலங்களில் வெளியான, எழுத்தாளர் உமா மகேஸ்வரியின் சிறுகதைகள் தொகுக்கப்பட்டு, 2002ஆம் ஆண்டு தமிழினி பதிப்பகத்தில் "மரப்பாச்சி" எனும் பெயரில் வெளியாகியது. குழந்தை எவ்வாறு சமூகவயமாகின்றதோ, சமய, சாதிய அடிப்படையில் வளர்க்கப்படுகின்றதோ அதேபோன்று பெண்ணும் சமூகக் கட்டமைப்பிற்குள் பெண்மை என்ற பண்பாட்டு ரீதியான கடமைகளுக்கு அடிமையாக்கப்படுகின்றாள். பெண்ணின் மனரீதியான, உளம்சார்ந்த போராட்டங்களையும் அவள் அவற்றை வெளிப்படுத்துகின்ற விதங்களையும் சமூகத்தின் கற்பிதங்களையும் எழுத்தாளர் உமா மகேஸ்வரி, தமது 'மரப்பாச்சி' எனும் சிறுகதைத் தொகுப்பில் பதிவுசெய்துள்ளார். இவருடைய சிறுகதைகள் பெண் படும் பாடு, பெண் மனம், பெண்மொழி, பெண் எழுத்து ஆகியவற்றை மையமிட்டு அமைந்துள்ளன. பெண் குழந்தையிலிருந்து தொடங்கி, வளர் இளம்பெண், நடு வயதினள், முதுபெண்டிர் ஆகிய அனைத்துத் தரப்பினருடைய மனநிலைகளைத் தம் சிறுகதைகளில் படம்பிடித்துக் காட்டியுள்ளார். இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள 13 சிறுகதைகளுள், வளரிளம்பெண்கள், நடுத்தர வயதுடைய பெண்கள் மற்றும் முதிய பெண்கள் ஆகியோரின் எண்ணவோட்டங்கள், உளப்போராட்டங்கள், சிக்கல்களை எதிர்கொண்ட விதங்கள் ஆகியவற்றை இக்கட்டுரை அறிய முற்படுகின்றது.

## வளரிளம் பெண்கள்

"குழந்தைப் பருவத்திலிருந்து இளம்பருவத்திற்கு மாறுகிற இந்தக்காலகட்டம், குழந்தை என்று தொட்டிலிலும் போடமுடியாமல், குமரி என்று கல்யாணக் கட்டிலும் போடமுடியாமல் எதிலும் சேர்க்க

முடியாத ஒரு பருவகாலகட்டமாகத் திகழ்கின்றது. உலகரீதியாக 12இல் இருந்து 18 வயதுக்குட்பட்ட சிறுமிகள் இவ்விளம் பெண்களாகக் கருதப்படுகின்றனர். மருத்துவத்துறையிலேயே இப்பருவகாலப் பெண்களை 'மருத்துவத்துறை அனாதைகள்' என்றழைக்கின்றனர். ஏனெனில், குழந்தை என்று இவர்களைக் குழந்தைநல மருத்துவரும் கவனிக்கமுடியாது. பெண் என்று பெண்நல மருத்துவரும் ஏற்கமுடியாது." பொதுவாகத் தாய் தந்தையரைப் பின்தொடர்ந்து குழந்தைகள் வளர்ந்தாலும் அவர்களின் உடல் மற்றும் மன நிலைகளின் வளர்ச்சிக்குச் சமுதாயம் முக்கியப் பங்காற்றுகின்றது. குறிப்பாகப் பெண்குழந்தைகள் சமூகத்தைக் கூர்ந்துநோக்குகின்றனர் (Panchangam, 2007).

அதனடிப்படையில், தன்னுடன் விளையாடுவதற்கு யாருமற்ற சூழலில், விளையாட்டுப் பொருள்களை மட்டுமே துணையாகக் கொள்கிறாள் அனு. அதிலும், அவள் தந்தை பரண்மேலிருந்து எடுத்துத்தந்த பெண்ணுருக்கொண்ட 'மரப்பாச்சி'யைத் தன் உற்ற தோழியாகவே ஏற்கிறாள். அம்மாவைப் பொறுத்தவரை வயிற்றில் சிறிய குழந்தை இருப்பதால், அனு பெரிய பெண். அப்பாவைப் பொறுத்தவரை, அவள் சிறு குழந்தை. 'பெரிய மனுசி போல யோசித்துக் கேள்வி கேட்காதே!' என்பார். தான் பெரிய பிள்ளையா? சிறு குழந்தையா? என்பதில் பெருத்த சந்தேகம் அனுவுக்கு. அதையும் மரப்பாச்சியிடமே கேட்பாள். தாய்தந்தையரின் அன்பின் போதாமையை அந்த மரப்பாச்சி இட்டு நிரப்பியது.

வளர்ந்து கொண்டிருக்கும் அனுவின் உடலில் பருவத்தின் மாற்றங்களினால் ஏற்படும் சந்தேகங்களுக்கும் வினாக்களுக்கும் விடைகளாக, மரப்பாச்சி தன்னுடலையே காட்டி நிற்கையில், அனுவுக்கு என்ன புரிந்ததோ, மகிழ்ச்சியாகதான் இருந்தாள். திடீரென ஒருநாள், மரப்பாச்சி ஆணாக மாறியது. இவளுடைய கற்பனைகளில், கனவுகளில், திரைப்படங்களில் பார்க்கும் கதாநாயகனாக, அம்புலிமாமா கதைகளில் வரும் இளவரசனாக, இன்னும் எல்லாமுமாக அது இருக்கையில் அனு இனம்புரியாத அனுபவங்களில் திளைக்கிறாள். எதிர்ப்பாலினங்களால் ஈர்க்கப்படுதல் என்பது, மனித இயல்புகளுள் ஒன்று. அனு மரப்பாச்சியின் உடலே ஆணாக மாறியதாகக் கற்பனை செய்துகொண்டு, அதையே தன் அணுக்கத்தோழனாகக் கருதுகிறாள். சிறிய வயதில் பெற்றோரின் கண்டுகொள்ளாத தன்மையின் காரணமாக, வளரிளம்பருவத்தில் அம்மா அருகில் வந்தாலும் மறுத்துவிடுகிறாள்.

விடுமுறைக்கு ஊருக்கு வந்த அனுவின் அத்தை, அவளுடைய வளர்ச்சியையும் அழகையும் ரசிக்கிறாள். அனுவின் அம்மாவின் அனுமதியுடன் அனுவை ஊருக்கு அழைத்துச்செல்கிறாள் அத்தை. அங்கு மாமாவின் காமப்பார்வையும் அவருடைய தவறான தொடுகையும் அனுவுக்கு அருவருப்பை ஊட்டுகின்றன. நடுநிசியில் இயற்கை அழைத்ததும் அதை முடித்துவிட்டுத் திரும்பும் அனுவை உடல்ரீதியாக அத்துமீற முனையும் மாமாவின் வழியாக, சில ஆண்களின் காம எண்ணங்களையும் பருவமடையக் காத்திருக்கின்ற ஒரு பெண் குழந்தையின் நிலையையும் எடுத்துக்காட்டியுள்ளார் எழுத்தாளர் உமா மகேஸ்வரி. மாமாவின் செயல்களால், காய்ச்சல் கண்ட அனு, விடாப்பிடியாக அழுது அடம்பிடித்து அம்மாவிடம் வந்து, ஏதும் சொல்லமுடியாமல் மரப்பாச்சியிடம் செல்ல, அது வேறுதிசையை நோக்கியிருந்தது. மரப்பாச்சி, பொம்மையாகவே இருந்தாலும் அது இச்சமூகத்தை அப்படியே பிரதிபலிப்பதாகக் காட்டியுள்ளார் எழுத்தாளர்.

ஒரு பெண், இதுபோன்று பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டாலோ, அல்லது பாலியல் வல்லாதிக்கத்திற்கு ஆட்பட்டாலோ அதற்குக் காரணமான ஆண்களை இச்சமூகம் எந்தக் கேள்வியும் கேட்பதில்லை. மாறாகப் பெண் அவமானப்படுத்தப்பட்டுப் புறக்கணிக்கப்படுகிறாள். பெண்ணின் உணர்வுகள், அவளுடைய எண்ணங்கள், ஆசைகள் சிதைக்கப்படுகின்றன. மனிதர்களின் மனநிலையை ஒத்ததாகவே மரப்பாச்சியும் ஆணிலிருந்து மீண்டும் பெண்ணாகி வேறு திசையைப் பார்க்கின்றது. அனு மரப்பாச்சியைச் சமூகத்தின் பிம்பமாகப் பார்க்கிறாள்.

"98 சதவிகிதப் பெண்கள் தங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு கட்டத்தில் பாலியல் ரீதியான துஷ்பிரயோகங்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது. அதில் 95 சதவிகிதப் பெண்களைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்வது குடும்ப உறுப்பினர்களே என்பதுதான் அதிர்ச்சியான செய்தி" என்று ஐ.நா. மற்றும் உலக வங்கியுடன் நீண்டகாலமாக இணைந்து பணிபுரிந்துவரும் தீபா நாராயண் தெரிவிக்கிறார்"

மேலும், அம்மரப்பாச்சி ஆண்தன்மையினின்றும் விடுபட்டு மீண்டும் பெண்ணாகியிருப்பதை உணர்கிறாள் அனு. கனவிலும் கற்பனையிலுமாக மகிழ்ச்சியாக இருந்த அனுவின் நாள்கள் இனி எதிர்காலம் குறித்த பயத்திலேயே கழிந்துவிடும். ஆணைப்பற்றிய அந்தச்சிறுமியின் எண்ணங்கள் சரியான ஆண்களைக்கூடச் சந்தேகப்படுத்திவிடும். பெண்கள் தங்கள் உடலையே வெறுப்புடன் நோக்க, இதுபோன்ற சூழ்நிலைகளே காரணங்களாக அமைந்துவிடுகின்றன.

"வளர்கின்ற பருவத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் தங்களின் ஆளுமையை, தனித்தன்மையை நிரூபித்துக்கொள்ள ஆர்வமாயிருக்கிறார்கள். ஆனால், உடற்கூறு வளர்ச்சி ஒன்றே போதும். சமூகத்தின் அத்தனை வக்கிரங்களையும் அவளுக்கு உணர்த்தி அmவளைச் செயலிழக்கச் செய்துவிடுகிறது. அவள் வெறும் உடல் பாரமாகத் தேங்கிவிடுகிறாள்" என்கிறார் ஆய்வாளர் பாரதி (Bharathiyar, 1993).

அதேபோல, ரணகள்ளி என்ற சிறுகதையும் வளரிளம்பெண்ணின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. ஒரு பெண் குழந்தைக்கு அவளுடைய அம்மா என்பவள் எவ்வளவு முக்கியமானவளாகிறாள்? எத்தனை உறவுகள் இருப்பினும் அம்மாவைப்போல யாரும் மகளுக்கு எளிமையாக எதையும் செய்துவிட முடியாது. அதுவும் பருவத்தை நோக்கி வளரக்கூடிய மகளுக்கும் மகப்பேற்றை எதிர்நோக்கியிருக்கும் மகளுக்கும் கண்டிப்பாக அவளுடைய தாய் தேவை. இக்கதையில் வரும் நிவேதாவின் தாய் இறந்தபிறகு, ஒவ்வொன்றிலும் தன் தாயையே காண்கிறாள். கண்ணாமூச்சி விளையாடும்பொழுது, மறைந்திருந்து எங்கிருந்தாவது வந்து தன்னை மகிழ்ச்சிப்படுத்திய அம்மா, இப்பொழுதும் எங்கிருந்தாவது வந்துவிட மாட்டாளா என ஏங்குகிறாள். எது காணாமல் போனாலும் தேடித்தரும் அம்மாவையே மரணம் களவாடிப்போவிட்டதாக வருந்துகிறாள்.

சிறுவயதில் எழுத்துகளை அம்மா கற்றுக்கொடுத்தபின்பு, அவள் வாழ்க்கையே எழுத்துகளாலானதாக எண்ணுகிறாள். எல்லா இடங்களிலும் தெரிந்த எழுத்துகளை ஒரு மாய உலகமாகக் கருதி, அதற்குள்ளாகவே பயணப்படத் தொடங்கினாள். ஆனால், தற்போது பாடப்புத்தகங்களிலும் நோட்டுகளிலும் உள்ள எழுத்துகள் மறைந்து வெள்ளையாகக் காட்சியளிக்கின்றன. தன் கண்களில் ஏற்பட்ட சிக்கலையறியாத சிறுமி, அம்மா கண்ணாமூச்சி ஆடுவதைப்போலவே எழுத்துகளும் விளையாடுவதாக எண்ணுகிறாள். அம்மாவின் இழப்பு என்பதே, மிகப்பெரிய உளவியல் சிக்கல். அவளுடைய மனத்தின் பாதிப்பே உடலிலும் பிரதிபலிக்கிறது. அதனால் எழுத்துகள் அவள் கண்களைவிட்டு மறைகின்றன (Panchangam, 2007).

'கதவு திறக்கும் கணம்' எனும் சிறுகதையில், தாயின் தவறான நடத்தையினால், கூனிக்குறுகி நிற்கும் வளரிளம்பெண்ணாக மஞ்சு காட்சிப்படுத்தப்படுகின்றாள். ஊருக்கு முன்பாகவும் தன் தெருவிலிருக்கும் பெண்களின் பரிதாபப் பார்வைக்கும் பதிலிறுக்க முடியாமல் தலைகுனிந்து தவிக்கும் மஞ்சுவின் மனநிலையை எழுத்தாளர் குறிப்பிட்டுள்ளார்.

மரப்பாச்சி மற்றும் ரணகள்ளி ஆகிய இரு சிறுகதைகளிலும் பதின்வயதுச் சிறுமிகளின் உளவியலை, எழுத்தாளர் மிக ஆழமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். சிறுமிகளின் மாய உலகம், இளவரசன் - இளவரசி கதைகள், பஞ்சதந்திரக் கதையில் வரும் இலகுபதனன் கதை, அவற்றுக்குள்ளாகவே நடக்கும் பயணங்கள், மரப்பாச்சியுடனும் டெடி பொம்மை மற்றும் தோட்டத்து மரம் செடி கொடிகளுடனும் தம் உணர்வுகளைப் பகிரும் சிறுமிகள் ஆகியவற்றை மிக இயல்பாகக் காட்சிப்படுத்தியுள்ளார்.

## நடுவயதுப் பெண்டிர்

பெண் எப்பொழுதும் யாரையேனும் (ஆணைச்) சார்ந்திருக்கவே பயிற்றுவிக்கப்பட்டதால், மனத்தில் துணிச்சலும் வைராக்கியமும் இருந்தாலும், தனிமையும் தனக்கு ஆதரவாக யாருமேயில்லை என்ற எண்ணமும் அவளைக் கலக்கமடையச் செய்துவிடுகின்றன. எவ்வளவு படித்திருந்தாலும் பெண் மிகப்பெரிய மனவுளைச்சலுக்கு ஆட்படுகின்றாள். பல சமயங்களில், அடுத்து என்னென்ன நடக்குமோ? யாரெல்லாம் எப்படிப் பேசுவார்களோ? என்றெல்லாம் எண்ணி மனக்கலக்கமடையும் அளவிற்கு

இச்சமூகம் மட்டுமல்லாது, குடும்ப உறுப்பினர்களும் பெண்ணின் உளவியற் சிக்கல்களுக்குக் காரணமாகின்றனர்.

தனக்கென்றுள்ள ஆசைகள், கனவுகள் எல்லாவற்றையும் குடும்பத்திற்காகத் தியாகம் செய்யக்கூடிய, நடுத்தரவயதுடைய பெண்களை காட்சிப்படுத்தியுள்ளார் (Uma Maheswari, 2007). 'கரு' எனும் சிறுகதையில், கணவனையும் குழந்தைகளையும் வயதான மாமியாரையும் கவனித்தல், வீட்டு வேலைகளின் பளு இவற்றுடன் கதை எழுத முற்படும் பெண்ணாக லதாவைக் காட்சிப்படுத்தியுள்ளார். கதை எழுத ஆசைப்பட்டாலும் இல்லறக் கடமைகளில் மூழ்கிய அவளுக்கு நேரமே கிடைக்கவில்லை. இரவு நேரங்களில் எல்லாரும் உறங்கியபிறகு, வீட்டு வேலைகளையெல்லாம் முடித்தபிறகு கதை எழுதுகிறாள். அதற்குத்தான் எத்தனை இடையூறுகள்… ஒரு கதை எழுதி முடிக்க லதாவுக்குச் சில மாதங்களாயின.

அவளுடைய கதையில் வரும் நாயகிக்குக் கட்டாயத்தின் அடிப்படையில் கருவுண்டாகச் செய்யும் செயல்கள், உடலும் மனமும் ஒருசேரப் புண்ணாகிப்போகும் வலிகள், மருத்துவச் சோதனைகள் எனப் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. "தலைக்குக் குளித்த ஐந்து நாளும் காலைல செம்பருத்தி இதழை வெறும் வயிற்றில் மென்று முழுங்கு" "அதுக்கப்புறம் வலதுபுறம் திரும்பிப்படு" "வெறும் வயிற்றில் பூண்டும் மிளகும் அரைத்து ஒரு உருண்டை சாப்பிடு" என்று சந்திக்கும் அனைவருமே மருத்துவராகிப்போன நிமிடங்கள் கூறப்பட்டுள்ளன (Bharathiyar, 1993). இதனாலெல்லாம் அப்பெண் மிகுந்த உளவியல் சிக்கலுக்கு ஆட்படுகிறாள்.

இவற்றைவிடப் பார்க்கும்போதெல்லாம், "சும்மாதான் இருக்கியா?" என்ற கேள்வி வேறு. "குடும்பத்தில் யாருக்கும் இந்தக் கதியில்லை… வதவதவென்று நிறையக் குழந்தைகள்… அம்மாவே எத்தனை பெற்றாள் சுலபமாக… இவ்வளவு தாமதமாகுதே, என்னமோ… ஏதோ…" என்றெல்லாம் பேசப்பேச அப்பெண்ணின் மனம், வலியாலும் கண்ணீராலும் நிரம்புகின்றது. இன்னும் காலம் இருந்தாலும் வயது இருந்தாலும் அவசர அவசரமாகப் பல்வேறு சோதனைகளால் பெண்ணுடல் கிழிபடுகின்றது. குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினரின் புண்படும் பேச்சுகளினால், மாதாந்திரத் தேதி நெருங்கினாலே, உடல் படபடத்துப் பதற்றமாகி நடுக்கம்கண்டு, தாளாத மனவுளைச்சலுக்கு ஆளாகும் பெண்ணின் மனநிலையைத் தெளிவுபடுத்தியுள்ளார் எழுத்தாளர்.

'ஆண்' எனும் சிறுகதை செய்யாத தப்புக்காகக் கணவனிடம் அடியும் உதையும் வாங்கும் பெண்ணின் மனநிலை சுட்டப்பட்டுள்ளது. பெற்றோர் ஊருக்குப்போய்த் திரும்பி வரும்வரையில் அக்கா வீட்டில் இருக்கும் தங்கையின் கண்முன்னே, அவள் கணவன் தன் சட்டைப்பையில் இருந்த தொகையைத் திருடிவிட்டதாகக் குற்றம்சாட்டி அடித்து உதைத்துக் காயமடையச் செய்கிறான். பின்பு தன் சட்டைப்பையிலிருந்து அதே தொகையை எடுத்து மறைத்துவைத்துக்கொள்ளும் அக்கா கணவனின் வக்கிர புத்தியை எண்ணியும் அன்பே உருவமான அக்காவின் வாழ்க்கையை எண்ணியும் வேதனையுறுகிறாள் தங்கை. 'இதுவும் பெண்ணா' என்ற அம்மாவின் சலிப்பில் தொடங்கி, இன்றுவரையில் தன்னைத் தன் குழந்தையாக எண்ணிக் கவனித்துவரும் அக்காவை அதிசயிக்கும் தங்கையின்வழியாகப் பெண்களின் உளவியல் வெளிப்பட்டுள்ளது.

பிராய்டு, 'மனித மனம் வன்முறையால் கட்டமைக்கப்பட்டது' என்பார். மேலும் ஆண் உடல் வலுவுடன் இருப்பதால் மற்றமையை (பெண்களை) கைகொள்ள, புறக்கணிக்க, கட்டுப்படுத்த முயன்று கொண்டே இருக்கும் என்பர். 'வருகை' எனும் கதையின் வாயிலாக, ஒரே வீட்டில் 18 ஆண்டுகள் இருந்தாலும் அப்பாவிடம் பேசிய சொற்களை எண்ணிவிடலாம் என்றெண்ணும் பெண்ணும் 'இறந்தவளின் கடிதம்' என்ற சிறுகதையில், உடல்நலமின்றிச் சில காலமாய் மருத்துவமனையில் இருக்கும் மனைவியிடம் கொடூரமாக நடந்துகொள்ளும் கணவனைப்பற்றியும் அதனால் மனவேதனையடைந்து இறந்துபோகும் நடுவயதுப் பெண்ணின் மனநிலையும் 'புதர்கள்' எனும் சிறுகதையில், குப்பைத் தொட்டிக்கு அருகிலும் புதர்களின் அருகிலும் நிர்வாணமாகத் திரியும் மனநலம் சரியில்லாத பெண்ணைப் பாதுகாக்க எண்ணும் மீனா என்ற பெண்ணும் காட்டப்பட்டுள்ளனர். மீனாவும் தெருமக்களும் கொடுத்த உடைகளைக் கழுத்திலும் தலையிலும் சுற்றிக்கொண்டு திரியும் அந்தப்பெண்ணைப் பரிதாபத்துடன் பார்க்காமல் நேரடியாகவும் மறைமுகமாகவும் இச்சையுடனும்

காமவெறியுடனும் நோக்கும் ஆண்களும் இறுதியாகப் புதர்களின் மறைவில் அப்பெண் வேட்டையாடப்படுதலையும் எண்ணி வேதனைப்படும் மீனாவின் உளவியலும் இச்சிறுகதைத் தொகுப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

“தந்தைவழிச் சமூகத்தில் ‘பெண் அடையாளம்’ என்பது, ஆணால் புனையப்பட்ட ஒன்றுதான்” என்ற கூற்று ஈண்டு நினைவுகூரத்தக்கது (Panchangam, 2007). பெண்ணைப் பற்றிய மரபுரீதியான பார்வை என்பது, ஆணுக்கு இருப்பதைப் போலவேதான் பெண்ணுக்கும் உள்ளது. பெண்ணே தன்னைப் பலவீனமானவளாகவும் சார்ந்திருப்பவளாகவும் கருதிக்கொள்கின்றாள் என்பதை இச்சிறுகதைகள் தெளிவுபடுத்துகின்றன. இக்கதைகளில் உலவும் நடுவயதுப் பெண் கதைமாந்தர்கள், சமூகத்தை நோக்கிய பல கேள்விகளை முன்னிறுத்துபவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர்.

## முதுபெண்டிர்

84 வயதையடைந்த சரஸ்வதி பாட்டி, குழம்பிய ஞாபகங்களின் தள்ளாட்டத்திலும் மயக்கம்போன்ற அரை உறக்கத்திலும் தன் பெயர்த்தி சுதாவின் வரவுக்காகக் காத்திருக்கிறாள். ஏனெனில், முகம் சுளிக்காமல் தன்னுடைய இயற்கைக் கழிவுகளைத் தூய்மைசெய்யும் தாயுள்ளம் பாட்டியின் பெயர்த்தியிடம் மட்டுமே இருந்தது. பல ஆண்டுகளாகத் தாத்தாவுடன் பேசாதிருந்த மௌனம் - காரணத்தையறிய விழைந்த சுதாவின் மனநிலை ஆகியவை ‘நிறைவின் உறைதளத்தில்’ என்ற இச்சிறுகதையில் காட்டப்பட்டுள்ளன.

“வாழ்வதற்காக மட்டுமல்ல; சாவதற்காகவும் தேவைப்படுகின்றன பிரார்த்தனைகள்” (ப.16) - சரஸ்வதி பாட்டி உடல் வேதனை தாளாமல் விரைந்து மரணிக்க வேண்டிக்கொள்ளச் சொல்லும்போது சுதாவின் மனத்தில் தோன்றிய எண்ணங்கள் இவை. பாட்டியின் இளவயதில் தாத்தா வேறொரு பெண்ணுடன் கொண்ட தொடர்பு தெரிந்து சண்டையிட்டது, பிறகு தன் சொந்த மருமகளையே தவறாக அணுகியது, அதைப்பார்த்த பாட்டி சுத்தமாகத் தாத்தாவிடம் பேசுவதையே நிறுத்தியது, அதனால் தாத்தா வீட்டைவிட்டு வெளியேறியது எனப் பாட்டி சுதாவிடம் அனைத்தையும் சொல்லிவிட்டாள். இவ்வளவுநாள் பேசாமலிருந்தாலும் தன் பெயர்த்தியிடம் சொல்லியபிறகே நிம்மதியானாள். சுதா, இனி எப்போதும் அணுகமுடியாத தொலைவுக்குப் பாட்டி சென்றதை உணர்கிறாள்.

பொதுவாகக் கணவனின் ஒழுக்கம் தவறாக இருந்தாலும் தனக்குப் பிடிக்கவில்லை எனினும், மனைவி சமூகத்தின் தூற்றுதலுக்குப் பயந்தோ, கணவனில்லாமல் பிள்ளைகளை எப்படி வளர்ப்பது என்று குடும்பத்துக்காகவோ கணவனின் தவறுகளை மன்னித்து ஏற்றுக்கொள்ளும் போக்கு நிலவுகின்றது. ஆனால், இச்சிறுகதையில் வரும் சரஸ்வதிப்பாட்டி பல ஆண்டுகள் கணவனுடன் பேசாமலிருந்தும் அவன் வீட்டைவிட்டு வெளியேறியபோதும் இறந்தபின்பு உடலை நடுக்கூடத்தில் கிடத்தியபோதும் வைராக்கியத்துடன் இருந்தாள். இவை எதையுமே வெளியிற் சொல்லாமல் மனத்திற்குள்ளாகவே எவ்வளவு மருகியிருப்பாள் பாட்டி எனும் இம்முதிய பெண்ணின் மனவுறுதி கூறப்பட்டுள்ளது.

‘தொலைந்தவன்’ எனும் சிறுகதையில், பெண் குழந்தைகள் மூவருக்குப்பின் பிறந்த ஆண் என்பதால் எல்லாச் சலுகைகளையும் பெற்றுத் தறிகெட்டுப்போன ஓர் ஆணின் வாழ்க்கை கூறப்படுகின்றது. கதை மூத்த மகளின் வாயிலாகக் கூறப்பட்டாலும் வயதான தாயின் எண்ணவோட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. சிறு வயதிலிருந்தே ஆண்பிள்ளை என்ற மனோநிலையில் மகனை வளர்த்து, அவனால் ஒவ்வொரு முறையும் தானும் தன் மகள்களும் புறக்கணிக்கப்படுகையில் மனம் முழுக்க வேதனைகளுடன் வாழும் தாயாகிய முதுபெண்ணின் நிலை விளக்கப்படுகின்றது.

“படிப்பின் சிறு வெற்றிகள், அட்டைகள் வைத்து அவன் உருவாக்கிய கட்டிடங்கள் ஒவ்வொன்றின்போதும் திருஷ்டிகழித்துத் தலையைச் சுற்றி அடுப்பில்போடும் மிளகாய் நெடி வீடுமுழுக்கக் கமறும்” (ப.66). ஆனால், பாரதியார் போட்டியில் முதல்பரிசு வாங்கிய மூத்த பெண்ணும் பி.காம். தேர்ச்சி பெற்ற இளைய பெண்ணும் பெற்ற தாயாலேயே புறக்கணிக்கப்பட்டு, ஆண் - ஆண்

என்று கொண்டாடிய தாயே, மகனால் காயப்படும்பொழுது, அம்முதுபெண்ணின் உளவியல் காட்சிப்படுத்தப்படுகின்றது (Bharathiyar, 1993).

## முடிவுரை

குழந்தை எவ்வாறு சமூகவயமாகின்றதோ, சமய, சாதிய அடிப்படையில் வளர்க்கப்படுகின்றதோ, அதேபோன்று பெண்ணும் சமூகக் கட்டமைப்பிற்குள் பெண்மை என்ற பண்பாட்டு ரீதியான கடமைகளுக்கு அடிமையாக்கப்படுகின்றாள் எனும் கருத்தியலைக் கதைகளாக விரித்துள்ளது மரப்பாச்சி. பதின்வயதுச் சிறுமிகளின் உளவியல், இச்சிறுகதைத் தொகுப்பில் மிக ஆழமாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. சிறுமிகளின் மாய உலகம், அதற்குரிய பயணங்கள், பொம்மைகள் மற்றும் தோட்டத்து மரம் செடி கொடிகளுடன் தம் உணர்வுகளைப் பகிரும் குழந்தைகள் ஆகியவை கூறப்பட்டுள்ளன. பெண் எப்பொழுதும் யாரையேனும் சார்ந்திருக்கவே பயிற்றுவிக்கப் பட்டதால், மனத்தில் துணிச்சலும் வைராக்கியமும் இருந்தாலும், தனிமையும் தனக்கு ஆதரவாக யாருமேயில்லை என்ற எண்ணமும் அவளைக் கலக்கமடையச் செய்துவிடுகின்றன. எவ்வளவு படித்திருந்தாலும் பெண் மிகப்பெரிய மனவுளைச்சலுக்கு ஆட்படுகின்றாள். மரப்பாச்சி எனும் இச்சிறுகதைத் தொகுப்பு, படைப்பாளியின் நனவு நிலையிலிருந்தும் அனுபவ நிலையிலிருந்தும் எழுதப்பட்டுள்ளது. பெண்ணைப் பற்றிய மரபுரீதியான பார்வை என்பது, ஆணுக்கு இருப்பதைப் போலவேதான் பெண்ணுக்கும் உள்ளது. உமாமகேஸ்வரியின் மரப்பாச்சி கதைகளில் உலவும் பெண்கள், தன்னிலை மற்றும் தங்களின் சிக்கல்கலைப் பேசுபவர்களாக மட்டுமல்லாமல், சமூகத்தை நோக்கிய பல கேள்விகளை முன்னிறுத்துபவர்களாவும் படைக்கப்பட்டுள்ளனர். கணவனின் தவறான நடத்தையினால் புண்பட்ட வைராக்கியம் மிகுந்த முதியவள் மற்றும் ஆண்பிள்ளையினால் புறக்கணிக்கப்பட்ட முதுபெண்டிரின் எண்ணங்களும் மனவலிமையும் உளவியலும் இச்சிறுகதைத் தொகுப்பில் காட்டப்பட்டுள்ளன. பலதரப்பட்ட பெண்களின் உளப்போராட்டங்களும் சமூகத்தில் அவர்களுக்கான இடம் என்பது நெருக்கடி மிக்கது என்பதையும் படைப்பாளி புனைவாக்கியிருப்பது தனித்துவமானது.

## References

Bharathiyar, (1993) Pen varappum Valarppum, Poonjolai Pathippagam, Chennai, India.

Panchangam, P. (2007) Pen Mozhi Padaippu, Kavya Pathippagam, Chennai, India.

Uma Maheswari, (2007) Marappaachu, Tamilini Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License